[12th August 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No ;

(b) Does not arise.

SRI M. RAJAH IYER : May I know, Sir, whether the policy of the Government, as stated in the budget, is to take over these district board schools under Government management?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no need to further take over. The Government have already taken over. They are called district board schools but they are managed by Government.

Co-operative Housing Societies

* 124 *Q.*—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the reasons for not sanctioning funds, from April 1962, to the Co-operative Housing Societies within the jurisdiction of the Deputy Registrar of Co-operative Societies, Periyakulam?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the Table of the House.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தேசிய நெருக்கடி வந்தபின்பு மொத்தத்தில் 2 கோடி ரூபாய்க்கு மேல் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும்கூட பெரியகுளம் டெபுடி ரிஜிஸ்ட்ரார் தனக்கு சொந்தமாக இருக்க வீடு இல்லாதபோது மற்றவர்களுக்கு வீடு கட்டுவதற்குக் கொடுப்பதா என்ற எண்ணத்தோடு யாருக்கும் கடன் கொடுக்காமல் வைத்திருக்கிறார். அந்த ஜூரிஸ்டிக்ஷனில் இருபது சங்கங்களுக்கு மேல் இருக்கிறது. ஒரு சங்கத்திற்கு மாத்திரம் கொடுத்து அந்த ரிகார்டுகளை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டாவது கேள்விக்கு அதாவது, இந்தச் சங்கத்திற்கு பணம் கொடுக்கப்படுமா, என்ற விஷயத்தில் இன்றைக்குத்தான் முடிவு எடுத்து இருக்கிறார்கள். இதுவரையில் கொண்டிருந்த முடிவுப்படி, வீடுகட்டுவதற்குக் கொடுப்பதில்லை என்பதை எடுத்துவிடுவது என்றும் பணஉதவி கொடுப்பது என்றும் முடிவாகியிருக்கிறது. இரண்டாவதாகக் குறிப்பிட்ட அந்த ஆபீசர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதற்கு தனியாகக் கேள்வி போட்டு எல்லா விவரங்களையும் கொடுத்து எழுதினால் அது பரிசீலனை செய்யப்பட்டு ஒழுங்காக இருக்கிறதா என்று பார்க்கப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, வீடுகட்டும் சங்கங்களின் அதிகாரிகள் வீடுகளை வந்துபார்க்கும்போது வீடு கட்டி முடித்திருந்தால், வீடு கட்டிமுடிந்துவிட்டது. இனிமேல் கடன் கொடுக்கமாட்டோம் என்றும், கட்டாமல் பாதியில் இருந்தால் நீங்கள் கட்டவில்லை, அதனால் கடன் கொடுக்கமாட்டோம்

---

a Printed as Appendix I on page 651 infra.

என்றும் இரண்டுவகையிலும் பணம் கொடுக்காமல் இருப்பதற்கு வழி செய்கிறார்கள். ஆகையால் சட்டத்தைத் திருத்தி அறை குறையாக இருந்தாலும் அவற்றிற்கு பணம் கொடுக்க சரியான உத்தரவு போடப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது சரியான உத்தரவுகள் தான் இருக்கின்றன. முடிந்த வீடுகளுக்குக் கடன் கொடுப்பதில்லை. கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள் அவற்றிற்குக் கொடுக்கமுடியாது. கட்டாமல் இருந்தால் கட்டவேண்டிய ஸ்டேஜ் பிரகாரம் பார்த்துப் பணம் கொடுக்கப்படும். அதனால் விதிகளை மாற்றுவது என்பது அவசியமாகத் தெரியவில்லை.

Construction of Houses at Allinagaram by the State Housing Board

* 125 *Q.*—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to construct houses by the State Housing Board at Allinagaram, Madurai district; and

(*b*) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The matter is under correspondence with the Special Officer, Allinagaram Municipality, about the source of financing the Scheme and the agency to execute and maintain it.

திரு. என். ஆர். தியாகராஜன் : அங்கே இடம் வேண்டுமென்று கேட்டபோது, முனிசிபல் இடமாக இருந்த இரண்டு ஏக்கரைக் கொடுப்பதாக நாங்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். சர்க்கார் பண உதவி செய்து வீடு கட்ட ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பணம் எந்த சோர்சிலிருந்து வாங்குவது, வீடுகள் எந்த அத்தாரிடி கட்டுவது என்பதெல்லாம் இப்போது கடிதப் போக்குவரத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

Soil Conservation Centres

* 126 *Q.*—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Soil Conservation Centres established in the State; and

(*b*) the area covered in Kanyakumari and Tirunelveli Districts under the scheme?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Seventeen Soil Conservation Centres (Sub-divisions) have been established in this State. In addition to this, a section is also functioning in Kanyakumari district from 1964–65 onwards to execute Soil Conservation Works.